# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

பதிப்பாசிரியர்கள்

முனைவர் ந. ஜெயசுதா

முனைவர் ம. பிரகாஷ்

தமிழ்த்துறை (சுயநிதி)
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

**பதிப்பாசிரியர்கள்**

முனைவர் ந. ஜெயசுதா
முனைவர் ம. பிரகாஷ்

**தமிழ்த்துறை**
**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி**
(தன்னாட்சி, தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் 'ஏ' தகுதி ஐ.எஸ்.ஓ. 9001:2015 தரச்சான்றிதழ் பெற்றது)
பொள்ளாச்சி - 642 001

# தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்

## (பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)

பதிப்புக்குழு

முனைவர் த. பரமேசுவரி (துறைத்தலைவர்),
முனைவர் த. இளங்கனி,
முனைவர் இரா. விஷ்ணுப்பிரியா,
முனைவர் ம. சித்திரகலா, முனைவர் த. பிரகாஷ்,
முனைவர் மு. சுகந்தி, முனைவர் இரா. ஜெயந்தி,
பேரா. ர. சூரியா, பேரா. அ. மகபூபு

முதற்பதிப்பு : டிசம்பர், 2018

வெளியீடு : ரூடே பதிப்பகம்
192, பெல்ஸ் சாலை,
சேப்பாக்கம், சென்னை - 600 005.

கணினி : ரூடே கிராபிக்ஸ்

அச்சாக்கம் : ரூடே பிரிண்டர்ஸ்
14/192, பெல்ஸ் ரோடு,
எஸ்.ஆர். காம்ப்ளக்ஸ், சென்னை-05.
அலைபேசி 98400 83738 / 044-2855 3797

பக்கங்கள் : xxiii + 483 = 506

விலை : ரூ.420/-

ISBN : 978-93-87882-47-8

# பொருளடக்கம்


1. தமிழ் இலக்கியங்களில் இறை இயல் காட்டும் படிநிலை வளர்ச்சிகள்
   முனைவர் அமுதன் — 1
2. திருமுறைகளில் திருக்குறள்
   N.S. அசோக்குமார் — 7
3. சிலப்பதிகாரம் காட்டும் அரசியல் அறம்
   பா. அந்தோனியம்மாள் — 15
4. பரிபாடலில் திருமால் வழிபாடு
   முனைவர் ப. அருள்ஜோதி — 19
5. தமிழ் இலக்கியத்தில் இறைநெறி
   அனிதா — 26
6. இசுலாமியத் தமிழிலக்கியம் காட்டும் இறைநெறிகள்
   முனைவர் இரா. ஆரோக்கியமேரி — 32
7. தமிழ்ச் சித்தர் இறைநெறி
   முனைவர் வெ. இராம்ராஜ் — 38
8. திருக்குறளில் இறைமை நெறி
   பேரா. முனைவர் இலலிதாசுந்தரம் — 46
9. திருமுருகாற்றுப்படையும் தெய்வம் போற்றும் மரபும்
   முனைவர் வே. கண்ணதாசன் — 53
10. சர்வமும் இறைமயம்
    பேரா. பா. கலைச்செல்வி — 61
11. நிலம் சார்ந்த இறைநெறி
    ம. காயத்ரி — 64
12. ஔவையின் பார்வையில் இறைவன்
    முனைவர் உ. கிருஷ்ணன் — 70
13. சைவசமயமும் இறைநெறியும்
    முனைவர் த. கீதாஞ்சலி — 77
14. சங்க இலக்கியத்தில் திருமால் வழிபாடு
    முனைவர் ச. குருஞானாம்பிகா — 83
15. ஆதிரையான் – ஆடவல்லான் வழிபாட்டு வளர்ச்சி நிலை
    ர.கோவர்தனன் — 88

# 11. நிலம் சார்ந்த இறைநெறி

ம. காயத்ரி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம்.கல்லூரி,
பொள்ளாச்சி.

உலகம் போற்றும் வகையில் வாழ்வியல் நெறியைப் பின்பற்றி வாழ்ந்த பண்டைத் தமிழர்கள் தங்கள் சக்திக்கும் ஆற்றலுக்கும் மேலான ஒரு சக்தியும் ஆற்றலும் உண்டு என்று உணர்ந்தனர். அந்தச் சக்தியையும் ஆற்றலையும் இறைவன், கடவுள், தெய்வம் போன்ற சொற்களால் குறித்தனர். பண்டைத் தமிழர்கள் தொடக்கநிலையில் இயற்கையை வழிபட்டு பின்னரே அந்த அந்த நிலம் சார்ந்த வழிபாட்டிற்கு வந்தனர். அதன் பின் குலம் சார்ந்த தெய்வம் என்று பகுத்து அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

## இயற்கை நெறி

இயற்கையோடு இயைந்து ஒன்றி வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அதனால் தங்களுக்கு அச்சத்தை உண்டாக்குகின்ற இடி, மின்னல், பாம்பு போன்றவற்றையெல்லாம் தெய்வங்களாகக்கருதி வழிபட்டு வந்தனர். மனிதர்களுக்கு உண்டாகின்ற அச்சமும், எதிர்கால வாழ்க்கையின் மீது கொண்ட அச்ச உணர்வும், வளமான பாதுகாப்பான வாழ்க்கை அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளுமே கடவுள், தெய்வ நம்பிக்கைகளுக்கும், வழிபாடுகளுக்கும் காரணிகளாக அமைகின்றன.

**உரு கெழு மரபின் கடவுள்** (பதிற்.21:5)

என்ற பதிற்றுப்பத்து அடியின் மூலம் அச்சம் தரும் இயல்பு கடவுளுக்கு இருப்பதாக மக்கள் நம்பியதை அறியமுடிகிறது.

மலை, காடு, மரம், கடல் முதலியவற்றில் தெய்வங்கள் உறைவதாக நம்பினர்.

**அணங்கொடு நின்றது மலை** (நற்.165:3)

**காடே கடவுள் மேன, புறவே**
**ஒள்ளிழை மகளிரொடு மள்ளர் மேன**
**ஆறே அவ் அனைத்து** (பதிற்.13:20-22)

எனும் பாடல்களின் அடிகள் மலை, காடு, மக்கள் நடமாடும் வழிகள் முதலியவற்றில் தெய்வங்கள் உறைவதாக மக்கள் எண்ணுவதன் மூலம் இறைநெறியை அறியமுடிகின்றன. கொடி, கா, புதர் போன்றவற்றிலும் தெய்வம் உறைவதாக நம்பினர். மரங்களில் மராஅ, பனை, வேம்பு, ஆல், வேங்கை, ஓமை, கள்ளி போன்றவற்றில் தெய்வங்கள் உறைவதாக மக்கள் நம்பியமையைச் சங்கப் பாடல்கள் வழி அறியமுடிகிறது.

## தொல்காப்பியர் இறைநெறி

தொல்காப்பியர் காலத்தில் சைவ, வைணவ நெறிகள் என்ற சமய வேறுபாடு இருந்திருக்காது. அதற்கான காரணம் சமயத்தின் அடிப்படையில் தெய்வங்களைக் குறிப்பிடாது நிலத்தின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளனர். அவை,

**மாயோன் மேய காடுறை யுலகமுஞ்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புன லுலகமும்**
**வருணன் மேய பெருமணலுலகமும்**
**முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே**

(தொல்.அகம்.5)

இப்பாடல் முல்லை நில தெய்வமாக மாயோன் (திருமால்), குறிஞ்சி நில தெய்வமாக சேயோன் (முருகன்), மருத நில தெய்வமாக வேந்தன் (இந்திரன்), நெய்தல் நில தெய்வமாக வருணன் என்று குறிப்பிடுகிறது. பாலை நில தெய்வத்தைத் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆனால் சங்க இலக்கியப் பாடல்களில் பாலை நில தெய்வமாக கொற்றவை குறிப்பிடப்படுகிறது.

## குறிஞ்சி - முருகன்

மலையும் மலைச் சார்ந்த பகுதியையும் குறிஞ்சி நிலம் எனப் புண்டைத் தமிழர்கள் வகுத்துக் கொண்டனர். குறிஞ்சி நிலம் இயற்கை எழிலையும், வனப்பையும் கொண்டது. ஆதலால் இதனை இறைபொருளாக உணர்ந்த பண்டைத் தமிழர்கள் முருகு என்று பெயரிட்டழைத்தனர். முருகு எனும் சொல் அழகு, இளமை, தெய்வ நலம், மணம் எனும் பொருள்களைச் சுட்டும். இந்த அடிப்படையில் முருகு எனும்

பெயரோடு அன் விகுதி சேர்த்து முருகன் எனும் திருப்பெயரால் குறிஞ்சி நிலக்கடவுளை இறைநெறியோடுப் போற்றி மக்கள் வழிபடத் துவங்கினர் என்பதை கலித்தொகை சுட்டுகின்றது. இன்றைய நூற்றாண்டில் பெரும்பாலான மலைக் கோயில்கள் முருகனுக்குரிய ஆலயங்களாகத் திகழுகின்றன. குன்றுதோறும் குடியிருப்பவன் குமரன். குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம் என்று மக்கள் பேச்சு வழக்கில் இடபெறுகின்றன. முருகன் மலைக் கடவுள் என்ற செய்தியை கலித்தொகை தவிர்த்து மற்ற பிற சங்க நூல்களும் சுட்டுகின்றன. மேலும் முருகப்பெருமான் சூரனை வதம் செய்யும் செய்தியினையும் பாலைக்கலிப் பாடல்கள் சுட்டுகின்றன. மேலும் முருகன் சிவபெருமானின் மகன் என்றும் அவன் சிறந்த அழகுடையவன் என்ற குறிப்பும் திருப்பரங்குன்றத்தில் விழா நடைபெற்றதை,

**ஆலஅமர் செல்வன் அணிசால் மகன் விழாக் கால்கோள்**

(மருதக்கலி.18:14-15)

என்று முருகப் பெருமான் பற்றிய செய்தி கலித்தொகையில் இடம் பெற்றுள்ளன.

## முல்லை - திருமால்

திருமால் பற்றிய குறிப்புகளில் அவர் திருமால் மட்டுமின்றி அவரது அவதாரங்களான பலராமனாகவும் வாமனனாகவும் கண்ணபிரானாகவும் சுட்டப்பட்டுள்ளார். *கலப்பை கொண்ட பலராமன்* (பாலைக்கலி.35) *பலராமன் போன்ற வெண்மை நிற கொண்ட எருது* (முல்லைக்கலி.7) *மூத்த முறைமையை உடையவனான பால் போன்ற வெண்மை நிறமுடைய பலதேவன்* (நெய்தற்கலி7:1-3) எனவும் உலகம் முழுவதையும் தன் மூன்றடிக்குள் அடக்கிய திருமாலின் அவதாரங்களின் ஒன்றான வாமண அவதாரத்தின் நோக்கத்தினையும், பகைவர் விடுத்த கூந்தற் குதிரையை வாயைப் பிளந்து கொன்ற கண்ணபிரான் என்பதை,

**காயாம்பூங் கண்ணிப் பொதுவன் தகை கண்டை**
**மேவார் விடுத்தந்த கூந்தற் குதிரையை**
**வாய்படுத்து இட்டு புடைத்த ஞான்று இன்னன் கொல்**
**மாயோன் என்று உட்கிற்று என் நெஞ்சு (முல்லைக்கலி.3:52-55)**

என்ற பாடல் அடிகளால் அறியமுடிகின்றன. மேலும் திருமால் பற்றி செய்திகளை எறுதழுவுதலின் முடிவில் தலைவனின் வெற்றிச் சிறப்பைக் கொண்டாட குரவைக் கூத்தை ஆடுவர். அப்பொழுது தங்களது வழிபடு தெய்வமான திருமாலை வழிபடுகின்றனர். கருத்த நிறமுடைய எருதினையும் சூரியன் மேற்கே மறையும் போது சூழும் இருளினையும் திருமாலின் நிறத்துடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர். இதன் மூலம் அத்தெய்வத்தின் மீது மக்கள் கொண்டிருந்த இறைநெறியையும் நம்பிக்கையையும் அறியமுடிகின்றன.

**மருதம் - இந்திரன்**

ஆண்டுதோறும் இந்திரவிழா கொண்டாடப்பட்டமையைச் சிலம்பும், மேகலையும் பதிவு செய்துள்ளன. இந்திர விழாவில் பூக்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டமையை,

**இந்திர விழவிற் பூவின் அன்ன**
**புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்**

(ஐங்குறுநூறு 62:1-2)

எனும் பாடல் அடிகள் குறிப்பிடுகிறது. மருதநிலத்து ஊர்களில் நிகழும் இந்திர விழாவைக் காண மக்கள் திரண்டு வருவதைப் பதிற்றுப்பத்தில் (30:14-21) குறிக்கப்பெறுகின்றன.

மருதத் திணையின் முக்கியத்தொழில் உழவு. உழவர்கள் உழுன்று விருந்தோம்பலைச் செய்து வந்தனர். மருத நில மக்களால் வணங்கப்பட்ட தெய்வம் வேந்தன் உழவுத் தொழிலுக்கு இன்றியமையாதது மழை, விண்ணிலிருந்து விண்ணுலக வேந்தன் மழைக்கு அதிபதியானான். மருத நிலக்கடவுளான இந்திரனைக் குறிக்கும் விதமாக

**உண்டாலம்மவிவ் வுலக மிந்திரர்**
**அமிழ்த்..................** (புறம்.182:1-2)

என்ற பாடல் அடிகள் குறிக்கின்றன. ஆய் அண்டிரன் என்னும் வள்ளல் இறந்த போது விண்ணுலகத்தில் இந்திரன் தொடி இசைத்து அவனை வரவேற்றான் என்பதை,

**வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட்** (புறம்.241:3)

என்ற பாடல் அடியில் குறிக்கப்பெறுகிறது.

## நெய்தல் - வருணன்

நெய்தல் நில மக்கள் கடலில் மீன் பிடித்தும், உப்பு விளைவித்தும், முத்தும், பவளமும், குளித்தும், நீர் வாணிகம் செய்தும் கடலாலேயே வாழ்ந்ததனால் தம் தெய்வத்தைக் கடல் தெய்வமாகக் கொண்டாடினர்.

**சின்னச் சுறளின் கோடுநாட்டு**
**மனைச் சேர்த்திய வல்லணங்கினான்**
**மடற்றாழை மலர்மலைந்தும்**
**பிணர்ப் பெண்ணைப் பிழிமாந்தியும்**
**புன்றலை யிரும்பாதவர் (பட்டினப்பாலை:86-92)**

இப்பாடல் அடிகள் வருணன் வழிபாட்டைக் குறிக்கின்றது. பெருங்கடல் தெய்வம் எனக் கலித்தொகை 131:1-2 பாடல் அடிகள் சுட்டுவது வருணனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். நெய்தல் நில மக்கள் சுறா மீனின் கொம்பை நட்டு, தங்கள் நிலத் தெய்வத்திற்கு இறைநெறியோடு வழிபாடு செய்தமையைப் பட்டினப்பாலை 86-93 ஆம் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றனர்.

## பாலை - கொற்றவை


காட்டில் வாழும் மறவர்களால் வழிபடப்பெற்ற தெய்வம் கொற்றவை. *கானமர் செல்வி* என்று அகநானூறு 345:5 பாடல் அடியிலும், *பெருங்காட்டுக் கொற்றி* என்று கலித்தொகை 89:8 பாடல் அடியிலும் கொற்றவை குறிப்பிடப்பெறுகின்றாள். கொற்றவை கோயில் காட்டில் அமைந்திருக்கும். இதனைப் பேய், பூதம், பிசாசு, காவல் காக்கும் என்று பட்டினப்பாலை 57-59 ஆம் பாடல் அடிகள் குறிக்கின்றன. மறவர்கள் கொற்றவையை வழிபட்டுப் பலிகொடுப்பர். அப்போது அவர்கள் காப்பாகத் தங்கள் கையில் நூலைக் கட்டிக் கொள்வர். *குருதிப் பலிகொடுத்தனர்* என்பதை குறுந்தொகை 218:1-2 ஆம் பாடல் அடிகளும் பதிற்றுப்பத்து 19:5-8 ஆம் பாடல் அடிகளும் குறிக்கின்றன. சேரமன்னர்கள் போர்த் தொடங்குவதற்கு முன்னர், கொற்றவையை வழிபட்டுச் சென்றனர் என்பதை பதிற்றுப்பத்து 90: 19-21 ஆம் பாடல் அடிகளும் குறிக்கின்றன.

## முடிவுரை

பண்டையத் தமிழகத்தில் சமயம் சார்ந்து தெய்வங்களை வழிபடவில்லை. ஐம்பூதங்களில் நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய இயற்கைப் பொருள்களையே வழிபட்டனர். அதன் பின்பே நிலத்திற்கு ஏற்றார் போல் தெய்வங்களை அமைத்து வழிபட்டனர். பிற்காலங்களில் தான் சமயம் என்பது வளர்ந்து, இந்து சமயத்தை இரு கூறுகளாக சைவம், வைணவம் என்று பிரித்துள்ளனர்.

நம் முன்னோர்கள் வழிவகுத்தலின் பேரில் நாம் மேற்கொள்ளும் இறைநெறியானது அறிவியல் ரீதியாகவும் பல மாற்றங்களையும் நன்மைகளையும் மனிதர்களுக்கு தரக்கூடியதாய் உள்ளன. தமிழ் இலக்கண இலக்கிய நூல்களிலும் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்து என்ற ஒன்றை அடிப்படையாகக் கொண்ட பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

XXX



ISBN 978-93-87882-47-8

டுடே பதிப்பகம்

192, பெல்ஸ்சாலை, சேப்பாக்கம்
சென்னை-5

9 789387 882478 >